**நிலைபேறு சுற்றுலாத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் - 2013**

நிலைபேறு சுற்றுலாத்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையே கைச்சாத்திட்ட 2010 நவம்பர் 08 ஆந் திகதிய 4702 - எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் IIB (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதி அளித்தல் மற்றும் காலப்பகுதி

நிலைபேறு சுற்றுலாத்துறை அபிவிருத்திச் செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு (எம்ஓஈடீ) மற்றும் இலங்கை சுற்றலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை (எஸ்எஸ்ரீடீஏ) என்பன முறையே செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்கள் ஆகும் குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையினால் பயன் பெறுனரது சுற்றாடல் மற்றும் சமுதாய ரீதியிலான சிறந்த முதலீடுகளுக்கு பலமளித்து நிறுவன ரீதியான கட்டமைப்பை ஏற்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் எஸ்டீஆர் 11,600,000 (ஐ.அ.டொலர் 18 மில்லியன்) ஆகும். சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (ஐடீஏ) மொத்தத் தொகைக்கான நிதியளிப்பை மேற்கொள்ளுவதற்கு உடன்பட்டது செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 மே 16 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைய வேண்டுமென பட்டியலப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், திறைசேரிச் செயலாளரின் தீர்மானத்திற்கமைய, செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 ஒக்டோபர் 14 ஆந் திகதியன்று முடிவுக்கு கொண்டுவரப்பட்டன.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு

தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் மீதான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட அறவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகள் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்.

## 3. அபிப்பிரயாம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகள் இணங்கப்பட்டிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 10,041,213 ஆகும். 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 13,730,630 ஆகும். முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் ஆக்கக் கூறு வாரியான பொழிப்பு கீழே காட்டப்படுகின்றன.

| செலவின வகை | டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சொத்து, பொறித்தொகுதி, உபகரணம் (தேறிய புத்தகப் பெறுமதி) | 2,857 | - | 101,323 |
| உசாத் துணைக் கட்டணம் | - | 300,000 | 1,711,850 |
| விளம்பரங்களும் பிரசுரங்களும் | 1,896,803 | - | 2,415,446 |
| நிர்வாகச் செலவினம் | 7,636,638 | 81,595 | 8,585,221 |
| ஏனைய செயற்திட்டச் | 503,915 | - | 912,779 |

| | | | |
|---|---|---|---|
| செலவினம் | | | |
| நிதிக் கிரயம் | 1,000 | - | 4,011 |
| | 10,041,213 | 381,595 | 13,730,630 |

### 4.2 விசேட (டொலர்) கணக்கு

செயற்திட்ட ஆரம்பத்திலிருந்து பேணப்பட்டு வந்த விசேட (டொலர்) கணக்கு எதுவும் இருக்கவில்லை.

## 5. கணக்காய்வு அவதானிப்புரைகள்

பின்வருவன அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) குறித்த செயற்திட்டக் காலத்தின் போது செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, செயற்திட்டத்தின் மொத்தக் காலப்பகுதியையும் உள்ளடக்குமாறு முழுமையான விபரத்துடன் செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமாயிகும், அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்படாததுடன் அமுலாக்கப்படவுமில்லை.

(ஆ) செயற்திட்ட ஆரம்பத்திலேயே அதன் நோக்கம் தெளிவாக வரைவிலக்கணமிடப்பட்டிருந்தது. 2013 பெப்ரவரி 5 ஆந் திகதியன்று செயற்திட்டத்தின் நோக்கெல்லை திருத்தஞ் செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறே, செயற்திட்ட நோக்கங்களை எய்துவதற்கு விளம்பர மற்றும் நிர்வாகத் தேவைகளுக்கு ரூபா 13,730,630 மொத்தமாகச் செலவிடப்பட்டிருந்தது. இது செயற்திட்ட நோக்கத்தை எய்துவதற்கு எதுவித மாற்றீட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினது செயலாளரின் வேண்டுகோளுக்கமைய செயற்திட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகவே, மேற்படி நடவடிக்கைகளுக்கான கிரயம் பயனற்றதாகியது. மேலும், இச் செயற்திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியளிப்பு உடன்படிக்கையின் 2.03 மற்றும் 2.04 பிரிவுகளின் பிரகாரம், சேவை மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் பயன்படுத்திய நிதிக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டிய வட்டி என்பன நிர்ணயிக்கப்பட்டுக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிலும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறானதுமான நிதிகளின் பயன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையின் படி நிதி ஒதுக்கீடு | | வருடாந்த மதிப்பீட்டின்படி மீளாய்வாண்டிற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடு | | 2013 டிசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | 18,000,000 | - | 700,000,000 | 114,417 | 13,563,370 |
| இலங்கை அரசாங்கம் | - | - | - | 1,492 | 164,500 |
| | 18,000,000 | - | 700,000,000 | 115,916 | 13,727,870 |

- அட்டுறு செலவினத் தாக்கம் காரணமாக இவ்வறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காணப்படும் தொகையிலிருந்து இத் தொகை வேறுபடுகின்றது.